**தலைப்பு 246 – உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 நவம்பர் 06 ஆம் திகதி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவும்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 3,148 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 3,087.96 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்தின் தேறிய ஏற்பாடுகளில் ரூபா 60 மில்லியன் அதாவது 2 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 2,010.33 | 2,002.41 | 7.92 | 0.39 |
| மூலதன | 1,137.67 | 1,085.55 | 52.12 | 4.58 |
| மொத்தம் | **3,148.00** | **3,087.96** | **60.04** | 1.91 |

### 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

2014 ஆம் ஆண்டிற்கான 23 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 605,330 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வருமானமாக ரூபா 485,387 மில்லியன் கூட்டுத்தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 80 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| **வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்** | **வருமானக் குறியீடு** | **திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு** | **உள்ளபடியான வருமானம்** | **(குறைவாக சேகரித்தல்)/ மிகையாகச் சேகரித்தல** | **சதவீதம்** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 10.02.01.01 | 25,000.00 | 24,436.88 | (563.12) | 98 |
| -மேற்படி- | 10.02.01.02 | 80,000.00 | 65,756.16 | (14,243.84) | 82 |
| -மேற்படி- | 10.02.01.03 | 50,000.00 | 45,441.70 | (4,558.30) | 91 |
| -மேற்படி- | 10.02.01.04 | 135,000.00 | 102,280.68 | (32,719.32) | 76 |
| -மேற்படி- | 10.02.02.01 | - | 2.31 | 2.31 | |
| -மேற்படி- | 10.02.02.02 | - | 1.15 | 1.15 | |
| -மேற்படி- | 10.02.03.01 | - | 13.77 | 13.77 | |
| -மேற்படி- | 10.02.09.00 | 30.00 | 472.18 | 442.18 | 1,574 |
| -மேற்படி- | 10.02.12.01 | 15,000.00 | 17,600.15 | 2,600.15 | 117 |
| -மேற்படி- | 10.02.12.02 | 11,600.00 | 10,893.87 | (706.13) | 94 |
| -மேற்படி- | 10.02.12.03 | 19,000.00 | 16,089.10 | (2,910.90) | 85 |
| -மேற்படி- | 10.03.03.00 | 1,500.00 | 815.17 | (684.83) | 54 |
| -மேற்படி- | 10.03.04.00 | 2,200.00 | 2,048.05 | (151.95) | 93 |
| -மேற்படி- | 10.03.05.00 | 1,000.00 | 841.83 | (158.17) | 84 |
| -மேற்படி- | 10.03.09.00 | 600.00 | 579.47 | (20.53) | 97 |
| -மேற்படி- | 10.04.01.01 | 98,000.00 | 81,643.76 | (16,356.24) | 83 |
| -மேற்படி- | 10.04.01.02 | 12,000 .00 | 10,365.56 | (1,634.44) | 86 |
| -மேற்படி- | 10.04.01.03 | 100.00 | 19.00 | (81.00) | 19 |
| -மேற்படி- | 10.04.04.00 | 8,400.00 | 6,154.51 | (2,245.49) | 73 |
| -மேற்படி- | 10.04.02.01 | 28,000.00 | 22,296.67 | (5,703.33) | 80 |
| -மேற்படி- | 10.04.03.01 | 107,400.00 | 69,402.27 | (37,997.73) | 65 |
| -மேற்படி- | 10.04.03.99 | 500.00 | 214.34 | (285.66) | 43 |
| -மேற்படி- | 10.04.02.99 | 10,000.00 | 8,018.45 | (1,981.55) | 80 |
| மொத்தம் | | **605,330.00** | **485,387.03** | **(119,942.97)** | **80** |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 24601 | 85.00 | 59.14 | 50.00 | 55.47 | 310.00 | 273.82 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி கணக்கு மீதிகள் ரூபா 1.4 மில்லியனாக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,095.16 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்பின் பெயர் | வைப்புக் கணக்கு இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| பொது வைப்பு | 6000/0000/00/0015/0126/000 | 57.42 |
| நானாவித வைப்பு | 6000/0000/00/0014/0003/000 | 2,037.74 |
| மொத்தம் | | 2,095.16 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 246 – உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணாமை

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 447 இன் பிரகாரம் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுப் பேரேடு (அங்கீகரிக்கப்பட்ட செலவு) நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பொது வைப்புக் கணக்குகள்

பின்రும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் ஒப்பந்தம் பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டமைக்காக அறவிடப்பட்ட ரூபா 25,902,750 தொகையான தாமதக் கட்டணம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 இன் பாதீட்டு மாநாட்டின் நுழைவுச்சீட்டு விற்பனையால் கிடைத்த ரூபா 752,500 தொகை 2014 இன் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) 6000-0000-000014-0003-000 ஆம் பொது வைப்புக் கணக்கில் 2013 ஆம் ஆண்டிற்கும் 2014 ஆம் ஆண்டிற்கும் உரியதாக முறையே ரூபா 1,047,477,214 தொகை மற்றும் ரூபா 990,267,695 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் மாகாண சபைகளுக்கு அனுப்பாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.3 கட்டு நிதி மீதி

பின்றும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 செப்தெம்பர் 20 ஆந் திகதி திணைக்களத்தின் கணனி முறைமையை புலனாய்வு செய்வதற்காக பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 1,400,000 தொகையான முற்பணம் 2015 யூலை 30 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) பிரதேச அலுவலகங்களுக்கு தபால் செலவினத்திற்காக உப கட்டு நிதி வழங்கும் போது அதற்குப் பணம் உப கட்டு நிதியாக வழங்கப்படாமல் ரூபா 14,969,000 கூட்டுத்தொகை திணைக்களத்தின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. நிதி ஆண்டின் இறுதியில் செலவிடப்படாத கட்டு நிதி திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய போதிலும் முறையற்ற கணக்கு வைப்பினால் அந்த தீர்க்கப்படாத கட்டு நிதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, நிதிப்பிரமாணம் 371(6) இன் படி ஏதாவது நிதி ஆண்டிற்காக வழங்கப்படுகின்ற பணம், ஏனைய நிதியாண்டின் கொடுப்பனவுகளுக்காக ஈடுபடுத்த கூடாத போதிலும் அதற்கு முரணாக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

**3.4 வருமானக் கணக்கு**

**3.4.1 வருமானக் கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய 241/2014 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின்படி 2014 ஆம் ஆண்டிற்கான 33 வருமானக் கணக்குகள் 2015 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டிய போதிலும் அந்தக் கணக்குகள் கணக்காய்விற்கு 2015 ஏப்ரல் 24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வருமானக் கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டிய நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 33 வருமானக் கணக்குகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 வருமானக் கணக்கு தயாரித்தலில் குறைபாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முத்திரை வரிகளிலிருந்து மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் மற்றும் மாகாண சபைக்கான கொடுப்பனவு/ மாற்றல்கள் முத்திரை வரி வருமானக் கணக்கில் காண்பிக்கப்படாமை

------------------------------------------------------------------------------------------------------------------------

2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின்படி முத்திரைக் கட்டணம் சேகரிக்கின்ற வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகமாவதுடன் 2011 இன் 13 ஆம் இலக்க மாகாண சபைகள் (முத்திரைக் கட்டண மாற்றல்) அதிகாரச்சட்டத்தின்படி அரசாங்கத்தினால் முத்திரை வரியாக சேகரிக்கப்படுகின்ற சகல வருமானமும், அந்த வருமானம் சேகரிக்கப்பட்ட அடிப்படையில் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட வேண்டும். அதன்படி முத்திரை வரியாக சேகரிக்கப்படுகின்ற சகல வருமானமும் முத்திரை வரி வருமானமாகவும் மாகாண சபைகளுக்கு அனுப்பப்பட்ட பணம் மீளச் செலுத்தல்களாகவும் முத்திரை வரி வருமானத்திற்கான வருமானக் குறியீடு 10.02.07.00 என்ற வருமானக் கணக்கில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் திறைசேரியினால் செலவு வைக்கப்பட்ட ரூபா 3,592,693,757 தொகையான முத்திரை வரி வருமானம் மற்றும் அந்தப் பணம் மாகாண சபைகளுக்கு மாற்றியது மாத்திரம் வருமானக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்திற்குச் கிடைத்த ரூபா 8.334,196,786 தொகையான மொத்த முத்திரை வரி வருமானம் மற்றும் அதில் மாகாண சபைக்கு மாற்றப்பட்ட ரூபா 7,343,929,092 தொகை அந்த வருமானக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசத்தை கட்டியெழுப்பும் வரிகளில் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் மற்றும் மாகாண சபைகளுக்கு கொடுப்பனவுகள் / மாற்றுதல்கள் வருமானக் கணக்குகளில் காண்பிக்கப்படாமை

------------------------------------------------------------------------------------------------------------------------

2009 இன் 9 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி சேகரிக்கும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் ஆக இருந்ததுடன் 2010 திசெம்பர் 29 ஆம் திகதிய 01/2010 ஆம் இலக்க அரசாங்க பொது நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தில் 33 1/3 சதவீதம் மாகாண சபைக்கு மாற்றப்பட வேண்டும். அதன்படி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக சேகரிக்கப்பட்ட ரூபா 57,681,494,877 கூட்டுத்தொகையான மொத்த வருமானம் தேசத்தை கட்டியெழுப்பும் மொத்த வருமானமாகவும் மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட ரூபா 13,098,373,164 தொகையான பணம் மீளச் செலுத்தல்களாகவும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி வருமானத்திற்கான

வருமானக் குறியீடு 10.02.12.01, 10.02.12.02 மற்றும் 10.02.12.03 ஆம் இலக்க வருமானக் கணக்குகளில் காண்பிக்க வேண்டிய போதிலும் சேகரிக்கப்பட்ட தேசத்தை கட்டியெழுப்பும் வரியில் 66 2/3 சதவீதம் அதாவது ரூபா 44,583,121,713 தொகையான தேறிய வருமானம் மாத்திரம் அந்த வருமானக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.4.3 நிலுவை வருமான அறிக்கை சமர்ப்பிக்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 128(2) (இ) இன் படி 2014 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறும் 2014 திசெம்பர் 31 இன் உள்ளவாறும் நிலுவை அரசாங்க வருமானம் தொடர்பான நிலைமை காண்பிக்கப்படுகின்ற அரையாண்டு அறிக்கை முறையே 2014 யூலை 31 ஆந் திகதிக்கும் 2015 சனவரி 31 ஆந் திகதிக்கும் முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பபிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணனி இணைய தளத்தின்படி (Internet) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிரதேச அலுவலகம் மற்றும் கணனிமயப்படுத்தப்படாத பிரிவுகளின் நிலுவை வரி வருமானம் தவிர கணனிமயப்படுத்தப்பட்ட பிரிவுகளில் ரூபா 220,904,830,695 கூட்டுத்தொகையான நிலுவை வரி காணப்பட்டது.

### 3.4.4 நிலுவை வரியை பதிவழித்தல்

2010 இன் 16 ஆம் இலக்க கொடுப்பனவைப் புறக்கணிக்கின்ற வரி தீர்த்தல் (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் 8(அ) பிரிவின் படி மீளாய்வாண்டின் போது நிலுவை வரிகளிலிருந்து ரூபா 15,575,382 தொகை 2014 சனவரி 09 ஆந் திகதிய 1844/62 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நிலுவை வரி ரூபா 206,587,271 தொகை திறைசேரி பிரதிச் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவழிக்கப்பட்டிருந்தது. அந்த ரூபா 206,587,271 தொகையான நிலுவை வரி மீதி தொடர்பாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இறுவெட்டு (CD) திறப்பதற்கு முடியாமையினால் அதில் உள்ளடங்கியுள்ள தகவல்களை கணக்காய்வு செய்வதற்கோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

### 3.4.5 வருமானத்தை மதிப்பீடு செய்தல்

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 20 வருமானக் குறியீடுகளுக்குரிய மீளாய்வாண்டின் ஆரம்ப வருமான மதிப்பீட்டின்படி வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 657,058 மில்லியனானதுடன் பின்னர் அது ரூபா 605,330 மில்லியன் கூட்டுத்தொகை வரை திருத்தஞ் செய்யப்பட்டிருந்தது. ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 485,387 மில்லியன் அதாவது ஆரம்ப வருமான மதிப்பீட்டில் 73.87 சதவீதமும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் 80.19 சதவீதமும் ஆக இருந்தன.

(ஆ) 18 வருமானக் குறியீடுகளில் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டை விட உள்ளபடியான வருமானம் குறைவடைந்திருந்ததுடன் 02 வருமானக் குறியீடுகளில் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டை விட உள்ளபடியான வருமானம் அதிகரித்திருந்தது. திணைக்களத்தின் பிரதான வருமான மூலமான பெறுமதி சேர் வரி வருமானம் (இறக்குமதி) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 96,590,086,435 ஆக இருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 102,280,685,200 தொகை வரை அதிகரித்திருந்தது.

(இ) சேகரிக்கப்பட்ட வரி வருமானம் (தேறிய) ரூபா 485,387,055,372 ஆக இருந்ததுடன் அந்த வருமானத்தில் ஏனைய திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு மாற்றப்பட்ட வருமானம் ரூபா 132,149,370,807 ஆக இருந்தது. அதன்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 27 சதவீதம் ஏனைய நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ஆகும்.

### 3.4.6 வருமானத்தைக் கணக்கு வைத்தல்களில் பிழைகளைச் சரிசெய்தல்

------------------------------------------------------------------------------------------------------------------

2013 ஆம் ஆண்டின் போது வருமானக் குறியீடுகளில் கிடைத்த ரூபா 15,281,672 தொகையான வரிகளிலிருந்து ரூபா 138,400 கூட்டுத்தொகையும், பிரிவு இனங்காணப்படாத ரூபா 987,135,632 தொகையான வரி பெறுவனவுகளில் ரூபா 46,567,342 கூட்டுத்தொகையும், 2014 ஆம் ஆண்டின் போது பிழையான வருமானக் குறியீடுகளுக்கு கிடைத்த ரூபா 6,352,277 தொகையான வரிகளிலிருந்து ரூபா 3,448,749 கூட்டுத்தொகையும், பிரிவு இனங்காணப்படாத ரூபா 579,810,204 தொகையான வரி பெறுவனவுகளில் ரூபா 73,350,901 கூட்டுத்தொகையும் 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 3.4.7 திறைசேரியின் கணக்குகளுடன் திணைக்களக் கணக்குகள் இணங்காமை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு முன்னைய ஆண்டின் போதும் திறைசேரியின் வருமான அறிக்கை மற்றும் திணைக்களத்தின் வருமான அறிக்கை என்பவற்றிக்கிடையே வேறுபாடுகள் காணப்பட்டதுடன் அந்தந்த வருடங்களில் அந்த சீராக்கப்படாதவை / முரண்பாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்வதற்கு (கணக்குகளுக்கிடையே இணக்கஞ் செய்வதற்கு) நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் முன்னைய ஆண்டுகளின் கணக்கு பொழிப்பின் மூலம் மற்றும் வருமானக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட வருமானத் தரவுகள் தொடர்பாக மாத்திரமின்றி மத்திய வங்கியின் அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட வருமானத் தரவுகளும் ஏதாவது முரண்பாடுகள் / சீராக்கப்படாமைகள் மற்றும் தரவுகளின் சரியான தன்மை தொடர்பாக கேள்விக்குரியதாக இருந்தது.

(ஆ) திணைக்களத்தினால் வருமானக் கணக்குகளில் வைக்கும் போது பெறுமதி சேர் வரிக்காக 10.02.01.00 ஆம் கட்டுப்பாட்டுக் கணக்கும், பொருட்கள், சேவைகள் வரிக்காக 10.02.02.00 ஆம் கட்டுப்பாட்டுக் கணக்கும், ஏனைய சகல வரிக்காகவும் 10.04.02.99 ஆம் கட்டுப்பாட்டுக் கணக்கும் பேணப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது திணைக்களத்தினால் பேணப்பட்ட வரி சேகரித்தல் அறிக்கையின்படி மேற்கூறப்பட்ட மூன்று கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதி மற்றும் திறைசேரி அறிக்கையின் பிரகாரம் காணப்பட்ட மீதிக்கிடையே பின்வரும் பிரகாரம் வேறுபாடுகள் காணப்பட்டன.

| வருமானக் கட்டுப்பாட்டுக் கணக்கின் விபரம் | திணைக்கள அறிக்கையின் பிரகாரம் வருமானம் | திறைசேரி கணனி அறிக்கையின் பிரகாரம் வருமானம் | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 10.02.01.00 | 136,720,428,707 | 136,708,072,672 | (12,356,035) |
| 10.02.02.00 | 3,462,440 | 3,459,764 | 2,676 |
| 10.04.02.99 | 229,136,640,087 | 229,083,257,926 | (53,382,161) |

மேற்கூறப்பட்ட வேறுபாடுகள் தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட மாதாந்த கணக்கு இணக்க அறிக்கையின்படி (Table 66) ஒவ்வொரு மாதத்திலும் திணைக்களத்திற்கு வருமான அறிக்கையின் பிரகாரம் வரி வருமானம் மற்றும் திறைசேரி அறிக்கையின்படி வரி வருமானம் இணக்கம் செய்யப்பட்டிருந்தது. எனினும் திணைக்களத்தின் வருமான அறிக்கையின்படி வருமானத்திற்கும் திறைசேரியின் கணனி அறிக்கையின்படி வருமானத்திற்கும் இடையே மேற்கூறப்பட்ட வேறுபாடுகள் காணப்பட்டன. திணைக்களத்தின் வருமான அறிக்கைக்கும் திறைசேரியின் வருமான அறிக்கைக்குமிடையே மதாதாந்தம் இணக்கம் செய்யப்பட்டு அந்த வருமான அறிக்கை இணக்கம் செய்யப்பட்டமைக்கு அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கூற்று ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ii) திணைக்களத்தின் வருமான அறிக்கையின்படியும் திறைசேரி கணனி அறிக்கையின் படியும் 10.02.01.00 ஆம் இலக்க கட்டுப்பாட்டுக் கணக்கில் காணப்பட்ட ரூபா 12,356,034 தொகையான வேறுபாட்டிற்கு காரணங்களைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக அந்தப் பணம் மீளச் செலுத்தலாக (Refund) வருமானக் குறியீட்டு இலக்கம் 10.02.01.02 இல் வருமானத்தில் கழிக்கப்பட்டிருந்தது.

(iii) திணைக்களத்தின் வருமான அறிக்கையின் படியும் திறைசேரி அறிக்கையின் படியும் 10.04.02.99 ஆம் இலக்க கட்டுப்பாட்டுக் கணக்கில் காணப்பட்ட ரூபா 53,382,161 தொகையான வேறுபாட்டுக்குரிய காரணத்தைக் கண்டறிந்து சீராக்கல் செய்வதற்குப் பதிலாக அந்த வருமானக் குறியீட்டில் மீளவும் அத்தொகை கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) திணைக்களத்தின் வருமானக் குறியீடு 10.04.02.99 ஆம் இலக்க கட்டுப்பாட்டு கணக்கில் ரூபா 229,136,640,087 தொகையான மொத்த வருமானத்தில் அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் வருமானக் குறியீடு 10.02.10.00 இற்குரிய ரூபா 84,655,276 தொகையும் உள்ளடங்கியிருந்தது.

### 3.4.8 திறைசேரியினால் வரி மிளச் செலுத்துதல்

மீளாய்வாண்டின் போது திறைசேரி கணனி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் திறைசேரியினால் ரூபா 11,339,155,267 கூட்டுத்தொகையான வரி மீளச் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பொழிப்பு பின்வருமாறு இருந்தது.

| வரி வகை | நேரடிச் செலுத்துகை | பிழையான சீராக்கம் | மாகாண சபைகளுக்கு மாற்றுதல் | விபரம் காணப்படாமை | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 10.02.01.02 | - | 26,517 | - | - | 12,819,516 |
| 10.02.02.02 | - | - | - | - | 2,676 |
| 10.02.07.00 | - | - | 3,592,693,757 | - | - |
| 10.02.12.03 | 7,993,890 | 103,548 | - | 7,664,390,205 | - |
| 10.03.04.00 | - | 633,258 | - | - | - |
| 10.04.02.99 | 7,109,740 | - | - | - | 53,382,160 |
| மொத்தம் | **15,103,630** | **763,323** | **3,592,693,757** | **7,664,390,205** | **66,204,352** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி சேகரித்தலின் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் ஆனமையால் சேகரிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மீளச் செலுத்தல்கள் அவரினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சுங்கத் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வரிகளிலிருந்து ரூபா 7,993,890 தொகை நேரடியாக அந்த திணைக்களத்தினால் மாகாண சபைகளுக்கு மீள செலுத்தப்பட்டிருந்தது.

மேலும் சுங்க திணைக்களத்தின் மீளச் செலுத்தல்களாக காண்பிக்கப்பட்ட ரூபா 7,664,390,205 தொகைக்கான விபரங்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறைசேரி அறிக்கையின்படி வருமானம், திணைக்கள அறிக்கையின் படியான வருமானத்திற்கு சமனாக்குவதற்காக ரூபா 66,204,352 தொகையான பணம் மீளச் செலுத்தலாகக் காண்பிக்கப்பட்டு திணைக்களத்தின் வரி வருமானத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

### 3.4.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான வரவு வரி மீளச் செலுத்துதல்

---

7002/0000/00/00/69/00/0214/000 ஆம் இலக்க திணைக்களத்தின் கட்டுநிதிக் கணக்கில் 2014 திசெம்பர் மாதத்தின் போது திறைசேரியினால் வரவு வைக்கப்பட்ட ரூபா 5,499,000 தொகையான வரவு வரி மீளச் செலுத்தல்களாக 2015 சனவரி 21 ஆந் திகதியில் IOD/CM/MIS/14 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 118 மற்றும் 205 இன் படி இவ்வாறு கட்டுநிதிக் கணக்கு வரவு வைக்கப்பட்டு வரி மீளச் செலுத்துவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே வரவு வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வரவு வரி மீளச் செலுத்தல்களின் அதிகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட்டமையினால் திறைசேரியினால் கட்டுநிதிக் கணக்கில் ரூபா 5,499,000 தொகை வரவு வைத்தல் சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்களாக இருந்தது.

மேலும், வரவு வரி 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்ட வரியாக இருந்தமையாலும், அந்தப் பணம் தொடர்பாக 2014 திசெம்பர் மாதம் வரை நடவடிக்கை எடுக்காதிருந்தமையும், அந்த வரவு வரி அறவிடாமைக்கான போதியளவான சான்றுகள் காணப்படாதிருந்தமையும் கேள்விக்குரியதாக இருந்தன.

### 3.4.10 வங்கிகளுக்குச் செலுத்தப்பட்ட வரிகளுக்காக கொடுப்பனவு அனுப்புதல் பத்திரம் கிடைக்காமை

---

மீளாய்வாண்டின் போது வருமான சேகரித்தல் கணக்குகளில் செலுவு வைக்கப்பட்ட பின்வரும் விபரங்களில் காணப்படுகின்ற வரி வகைகளுக்காக வரியாளரினால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவு அனுப்புதல் பத்திரம், வங்கியினால் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. அனுப்புதல் பத்திரம் இல்லாமையினால் வரியாளர்களினால் செலுத்தப்பட்ட வரித் தொகை உரிய வரியாளர்களின் கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

| வரி வகை | கணக்கு இலக்கம் | கொடுப்பனவுப் பத்திரம் இன்றி கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட தொகை | 2014 ஆம் ஆண்டின் போது கிடைத்த அளவு | 2015 மே 28 ஆந் திகதி வரையில் கொடுப்பனவுப் பத்திரம் இல்லாமையினால் கணக்கு வைக்கப்படாத பெறுமதி |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| பெறுமதி சேர் வரி | 2026647 | 104,464,161 | 60,999,413 | 43,464,748 |
| வருமான வரி | 2026527 | 25,615,978 | 16,511,352 | 9,104,626 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 2026713 | 12,584,800 | 12,254,077 | 330,723 |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 7041556 | 42,746,310 | 25,305,643 | 17,440,667 |

### 3.4.11 வரி அதிகாரச்சட்டங்களிலிருந்து எழுந்துள்ள பிணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலுவை வரி காணப்படுகின்ற சில வரியாளர்கள் தமது தொழில் முயற்சிகளை மூடி மீண்டும் வேறொரு பெயரில் (கம்பனியாக) அந்த முகவரியிலேயே வரிக்காக பதிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இதன் போது தொழில் முயற்சி ஒன்றை மூடியதன் பின்னர் அந்த உரிமையாளர் புதிய தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிக்கும் போது திணைக்களத்தினால் முன்னர் காணப்பட்ட தொழில் முயற்சி தொடர்பான வரி முடிவுறுத்தல் சான்றிதழ் ஒன்று (Tax clearance certificate) பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கு ஏற்பாட்டைத் தயாரித்தல் மூலம் காணப்படுகின்ற நிலுவை வரியை இழிவுபடுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 102 (1) ஆம் பிரிவின் படி ஏதாவது மதிப்பீட்டு வருடமொன்றில் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு வழங்கப்படுகின்ற நிதிகளிலிருந்து 3 சதவீதம் அந்த மதிப்பீட்டு வருடத்திற்கான அரச சார்பற்ற அமைப்புக்களின் இலாபம் மற்றும் வருமானமாக கருதப்பட வேண்டி இருந்ததுடன் அந்த அளவின் அடிப்படையில் 28 சதவீத வரி (2014 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல்) அறவிடப்பட வேண்டும். மேலும் அந்த நிறுவனத்தினால் காலாண்டு

அடிப்படையில் வருமான அறிக்கை உள்நாட்டு இறைவரி ஆணையாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அதன்படி திணைக்களத்தில் பதிவு செய்துள்ள 359 அரச சார்பற்ற அமைப்புக்கள் காணப்பட்ட போதிலும் 2011 யூலை 22 ஆந் திகதிய 2011/04 ஆம் இலக்க திணைக்களத்தின் வழிகாட்டிக் கோவையின் 4(III) ஆம் பந்தியின் படி அந்த அமைப்புக்களினால் நிதி பெறப்படுகின்றமை தொடர்பாக காலாண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக திணைக்களத்தினால் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.12 வினைத்திறனான விகிதம்

ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் திணைக்களத்தின் மொத்த செலவினம் ரூபா 3,087,962,992 ஆக இருந்ததுடன் வருமானக் கணக்கின்படி உள்ளபடியான வரி வருமானம் ரூபா 485,387,055,372 ஆக இருந்தது. அதன்படி வினைத்திறன் விகிதம் 157:1 அதாவது ரூபா 100 இற்கு சேகரித்தல் கிரயம் 64 சதமாக இருந்தது. முன்னைய ஆண்டின் வினைத்திறன் விகிதம் 249:1 அதாவது ரூபா 100 இற்கான சேகரித்தல் கிரயம் 40 சதமாக இருந்தது. அதன்படி மீளாய்வாண்டில் ரூபா 100 இற்கான வரி சேகரித்தல் கிரயம் 24 சதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

24601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 273,820,300 ஆக இருந்ததுடன் அதில் உள்ளடங்கியுள்ள ரூபா 3,050,162 தொகையான நிலுவை மீதிகளை 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2012 செப்தெம்பர் 18 ஆந் திகதி மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 191,514 தொகையான ஆதனக் கடனை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதவி நீக்கம் செய்யப்பட்ட 03 உத்தியோகத்தர்களிடமிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த ரூபா 552,702 தொகையிலிருந்து ரூபா 313,012 தொகை ஊக்குவிப்பு படிகளிலிருந்து 2015 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய ரூபா 239,690 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வேலையை விட்டுச் சென்ற 5 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 496,660 தொகையான கடன் மீதிகளிலிருந்து மீளாய்வாண்டின் போது எந்தத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) ஊழியரொருவருக்கு ரூபா 252,045 தொகையான ஆதனக் கடன் வழங்கும் போது அவர்களின் பெயரில் காணியின் உறுதி எழுதப்பட்டு அட்டோர்னி அதிகாரம் பதிவு செய்யப்படாமையினால் 1999 ஆம் ஆண்டின் போது அவர்கள் சேவையை விட்டுச் சென்ற பின்னர் அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஊ) 1996 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்திற்குரிய ரூபா 230,534 தொகையான கடன் மீதிகளுக்குரிய கோவைகள் மற்றும் விபரங்களை கண்டறிவதற்கு முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தமையால் அந்தக் கடன் மீதி அறவீடு செய்ய முடியாத கடன் மீதிக்கு உள்ளாகியிருந்தது.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 3.6.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றிக்கையின் படி வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொள்வனவுத் திட்டத்தின்படி கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதனச் சொத்துக்களை புனரமைப்புச் செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்குரிய 246-1-1-2002 ஆம் இலக்க செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 2,500,000 ஆக இருந்த போதிலும்

கொள்வனவுத் திட்டத்தில் அதற்கான கொள்வனவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 இன் திருத்திய பாதீட்டு மதிப்பீட்டின் படி கொள்வனவுத் திட்டம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ், அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டிற்காக 03 கூட்டத் தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டதன் படி சில சொத்துக்கள் விளைவற்றதாகவும் குறைந்த பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| டிரான்ஸ்போமர் இயந்திரம் | 02 | உள்நாட்டு இறைவரிக் கட்டிடம் நவீனமயப்படுத்தும் போது வழங்கப்பட்ட அந்த இரண்டு இயந்திரங்களும் 2009 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| சீ.சீ.ரீ.வீ. கெமரா | 70 | 2010 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு இறைவரிக் கட்டிடம் நவீனமயப்படுத்தும் போது கட்டிடத்தின் தளங்களில் சீ.சீ.ரீ.வீ. கெமரா பொருத்தப்பட்டிருந்ததெனினும் அவை பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

(ஆ) பெறவேண்டிய மீதி

கொழும்பு 12 இல் ஶ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள கட்டிடப்பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்குரிய காணியில் 100 பேர்ச் காணிப் பகுதியொன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையேற்பதற்காக 2008 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 50 மில்லியன் வ/ப கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அந்த சொத்தினைக் கையேற்றல் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த முற்பணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்களாக ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 46,641,222 தொகையான பொறுப்புக்களுக்கு மேலதிகமாக ரூபா 1,619,198 தொகையான பொறுப்புக்களும் காணப்பட்டன.

## 3.8 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 94 | 10 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 38,599,221 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை

---

5.4.12 ஆம் வழிகாட்டி

பெறுமதிசேர் வரி அரசாங்க நிறுவனத்தினால் செலுத்தும் போது அது தொடர்பான விபரங்கள் கொடுப்பனவு செய்யப்பட்ட மாதத்தின் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பவேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 89 அரசாங்க நிறுவனங்களினால் மாத்திரம் அந்த தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய நிறுவனங்களிலிருந்தும் அந்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட வரித் தேவைகளுடன் இணங்காத வகையில் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) பெறுமதிசேர் வரிக்காக அறிக்கை சமர்ப்பிக்காமை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

* இரண்டு வரி இறுப்பாளர்களுக்கு இரண்டு அரசாங்க நிறுவனங்களினால் ரூபா 6,706,375 கூட்டுத்தொகையான பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டிருந்த போதிலும் வரி இறுப்பாளர்கள் அந்த வரியை திணைக்களத்திற்குச் செலுத்தியிருக்கவில்லை.

* செயற்பாடற்ற வரி இறுப்பாளராக கணனி முறைமையில் காண்பிக்கப்பட்ட 06 வரி இறுப்பாளர்களுக்கு பெறுமதிசேர் வரியாக ஒப்பந்தக்காரரினால் செலுத்தப்பட்ட ரூபா 943,143

தொகையான வரி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நிலுவை வரி அறவிடப்படாமை

------------------------------------------------------------------------------------------------------------------------

வரி இறுப்பாளரின் 2007/08 ஆம் ஆண்டிற்காக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 449,448,567 தொகையான பெறுமதி சேர்வரி மற்றும் ரூபா 642,393,631 தொகையான வருமானவரி என்பன தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வரிக்கோவை பரிசோதனை

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* 2010 ஏப்ரல் 1 ஆந் திகதி முதல் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்காக செலுத்தப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியில் செலவினமாக கழிக்கப்பட வேண்டிய 1/3 பங்கு மாத்திரமாக இருந்த போதிலும் ரூபா 999,871 தொகையான முழுத்தொகையும் கழிக்கப்பட்டிருந்தது.

* 2009/10, 2010/11 மற்றும் 2011/12 ஆம் வருடங்களுக்காக குறைத்துக் காண்பிக்கப்பட்ட ரூபா 180,652,889 கூட்டுத்தொகையான வருமானத்தின் அடிப்படையில் ரூபா 7,178,027 தொகையான மேலதிக வரியொன்றை செலுத்துவதற்கு வரி இறுப்பாளர் இணங்கி இருந்த போதிலும் 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த வரித் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

* வரி இறுப்பாளர்களிடமிருந்து 2006/07, 2007/08, 2008/09 மற்றும் 2009/10 ஆம் ஆண்டுகளுக்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 207,967,965 தொகையான வருமான வரி, மேலதிகமாகச் செலுத்தப்பட்ட வரிகளிலிருந்து ஈடு செய்தல், ஏனைய காலப்பகுதிகளுக்கு செலவு வைப்பதன் மூலம் சீராக்கல் மற்றும் முறையீடுகள் மூலம் தீர்த்து வைத்தல் போன்ற நடவடிக்கைகளினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

* பெறுமதி சேர் வரியான 07031 முதல் 08123 வரையான காலத்திற்காகக் காணப்பட்ட ரூபா 573,262,517 தொகைக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்ட அந்த மதிப்பீட்டு அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.9 செயற்திட்டத்தை அமுலாக்குவதில் தாமதம்

2009 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் போது நிர்ாமணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட 09 மாடிகளையுடைய வாகன தரிப்பிடமொன்றை நிர்மாணித்தல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியமை எழுத்து மூலம் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றிற்கு அந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதன் நிர்மாண நடவடிக்கைகள் 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.10 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு

திணைக்களத்தில் வரி வருமானம் சேகரிப்பதற்கான பேணப்பட்ட 33 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற வடிவிலானதாக இருந்தது. அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பாதுகாப்பு சேவையினால் பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தம் அதிக விலையில் பெறப்பட்டமை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் பாதுகாப்புச் சேவை ரூபா 19,302,360 தொகையான வருடாந்த வாடகையில் 90 பேர்களையுடைய பாதுகாப்புப் பதவியணியினரை ஈடுபடுத்துவதற்கு முடியுமான போதிலும் வருடமொன்றிற்கு ரூபா 34,686,240 தொகையினை அறவிடும் கம்பனி ஒன்றிற்கு பாதுகாப்புச் சேவை ஒப்பந்தம் வழங்கப்பட்டமையின்

காரணமாக வருடமொன்றிற்கு ரூபா 15,383,880 தொகை மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1:2 ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்காது 2010 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 445 இன் படி நடவடிக்கை எடுத்தமையின் காரணமாக திறந்த கேள்வி கோரலின்றி பாதுகாப்பு சேவை வழங்கலுக்காக அந்தக் கம்பனி தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்காக பணம் செலுத்துதல்

---

2009 யூலை 09 ஆந் திகதி உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் ஒப்பந்தம் அரசாங்கக் கூட்டுத்தானமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்கக் கூட்டுத்தாபனத்தினால் ஏனைய ஒப்பந்தக்காரர்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளில் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிராத போதிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) இந்த ஒப்பந்தத்தின் மதியுரைச் செயற்பாடுகளுக்காக ரூபா 49,580,000 தொகை அந்த அரசாங்கக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருக்கும் போது அதற்கு மேலதிகமாக அரசாங்கத்தின் உசாத்துணைப் பணியகத்திற்கும் ரூபா 1,250,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஒப்பந்தக்காரரினால் மதியுரையாளராக செயற்பட்டமையினால் ஒப்பந்தச் செயற்பாடுகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளின் வெளிப்படுத்தல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த ஒப்பந்தத்தின் கீழ் வாகனத் தளத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் தாமதமடைந்தமையால் வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடமொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3,285,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### முற்செலுத்துதல் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுதல்

திணைக்களத்தினால் 2013 யூன் 21 ஆந் திகதி முதல் ரூபா 100,000 தொகையான முற்செலுத்துதல் அட்டை வருடாந்தம் திறைசேரியிலிருந்து பெறப்பட்டு அத்தொகை இலங்கை வங்கியின் முற்செலுத்துதல் அட்டைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த முற்செலுத்துதல் அட்டைக் கணக்கில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது எதுவித செலவினமும் செய்யப்படாதிருந்தமையால் முற்செலுத்துதல் அட்டைக்காக வருடாந்தம் ரூபா 100,000 வீதம் பெறப்பட்ட பணம் விளைவற்ற பணமாகியிருந்தது.

## 3.13 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1,250 | 1,152 | 98 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 24 | 130 | - | 106 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,052 | 585 | 467 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 397 | 372 | 25 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | **2,723** | **2,241** | **590** | **108** |

சிரேஷ்ட நிலையிலும் இரண்டாம் நிலையிலும் 565 பதவிகள் அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 25 சதவீத வெற்றிடம் காணப்பட்ட போதும் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. மூன்றாம் நிலையில் 106 பதவிகளின் மிகைக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கும் தவறியிருந்தது.